1990 ஆகஸ்ட் 21]

பலயிடங்களில் புல திட்டங்களை வேளாண்மைத் துறை, கிரவுண்டு வாட்டர் துறை போன்றவை மூலமாக இதை அணுகலாம் என்பது என்னுடைய கருத்து.

திரு. டி.சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வைச் செய்யும்போது பி.சி. ரேஷியோவை உபயோகம் செய்கிறார்கள். தளித் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகும். அந்த இடத்தில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—ஒசூர், தென்கனிகோட்டை போன்ற இடங்களில் இந்த பி. சி. ரேஷியோவை கொண்டு வராமல்—அதற்கு எக்சம்சன் கொடுத்து உதவி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை தருவது அணைக்கட்டுவதில் இருக்காது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரின் ஆர்வத்தை கணக்கில் கொண்டு நான் ஒரு முறை உங்கள் பகுதிக்கு வந்து பார்வையிட்டு முடிவு எடுக்கலாம்.

பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம்.

* *9418* திரு. கே. சுந்தர் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் வட்டத்தில் பாலேஸ்வரம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

சித்த மருத்துவக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமும் ஏற்படுத்துதல்.

* *5204* திரு. செங்கைசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

TRUTH ALONE TRIUMPHS